## ஜ்ஸகாத் செலுத்துவதற்கான ஒழுக்க முறைகள்

1 முழு மனதுடனும் மனமுவந்து விருப்பத்துடன் ஜ்ஸகாத்தைக் கொடுக்க வேண்டும்.

2 சிறந்த பொருளையே ஜ்காத்தாகக் கொடுக்க முயற்சிக்கவேண்டும்.

3 மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்ளவும் காட்சிப்பொருளாகவும் இல்லாது மறைத்துக் கொடுக்கவேண்டும்.

4 மனம் தளராதிருக்கும் வகையில் எங்களுடைய செல்வத்திற்கான ஜ்ஸகாத் தைச் செலுத்துவதில் உதவுங்கள் என்று மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

5 ஜ்ஸகாத் கொடுப்பதற்காக நேர்மையானவர்கள் என்று அறியப்படுபவர்களில் தேவையுள்ளவர்கள் மற்றும் யாருக்கு முன்னாலும் கையேந்தித் திரியாதவர் களைத் தேர்ந்தெடுக்க வேண்டும், அவர்களிலும் தன்னுடைய நெருங்கிய உறவினர்களுக்கு முன்னனுரிமை அளிக்கவேண்டும்.

6 அல்லாஹ்வுக்கு அடிபணிபவர்கள் என்பது ஊர்ஜிதமாகும் வகையில் செலுத்த வேண்டிய ஜ்ஸகாத்தை உடனே செலுத்திவிடவேண்டும், தேவையில்லாது தாமதப்படுத்தவோ அவ்வாறு இருந்திருந்தால், இவ்வாறு இருக்கலாம் என் றெல்லாம் காலங்கழிக்கக்கூடாது.

7 ஜ்ஸகாத் கொடுப்பவர் அதனை உரியவர்களுக்கு அளிக்கும்போது இந்த துஆவைச் சொல்லவேண்டும்:

أَللهُمَّ اجْعَلْهَا مَغْنَماً وَلاَ تَجْعَلْهَا مَغْرَما

மற்றும் அதனைப்பெற்றுக்கொள்பவர்கள் இந்த துஆவைச் சொல்லவேண்டும்:

آجَرَكَ اللهُ فِيْما أَعْطَيْتَ وَجَعَلَهَا لَكَ طَهُوْراً وَبَارَكَ لَكَ فِيْمَا أَبْقَيْتَ

8 ஜ்ஸகாத் வாங்கிக்கொள்பவரிடம் இது ஜ்ஸகாத் பணம் என்று சொல்லவேண் டிய தேவையில்லை, இதனால் வாங்கிக்கொள்பவருடைய சுயமரியாதை பாதிக் கப்படலாம்.

* * *

www.uzaifalahi.com